**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.177** **நாள் : 15.07.2025**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் இன்று (15.07.2025) தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் 7 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "**உங்களுடன் ஸ்டாலின்**" திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் இன்று (15.07.2025) தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் இன்று (15.07.2025) 7 வார்டுகளில் "**உங்களுடன் ஸ்டாலின்**" திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டு, ஸ்ரீ மகாவீர் ஜெயின் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "**உங்களுடன் ஸ்டாலின்**" முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடி, பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார்.

அடையாறு மண்டலம், வார்டு-168, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்ற முகாமினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார்.

திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-76, ஸ்டாரஹன்ஸ் சாலையில் உள்ள திரு.வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற முகாமினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார்.

மேலும், மாதவரம் மண்டலம், வார்டு-25ல், மாதவரம் தபால் நிலைய சாலையில் உள்ள எம்.ஆர்.பேலஸிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-38ல் பட்டேல் நகர் பள்ளியிலும், வளசரவாக்கம் மண்டலத்தில், வார்டு-143ல், அம்பத்தூர் இன்டஸ்ரியல் எஸ்டேட், வேலம்மாள் அரங்கிலும், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109ல், மத்திய பள்ளி சாலையில் உள்ள கில்நகர் விளையாட்டுத் திடலிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து வழங்கினர். முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08.2025 வரை "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் 109 முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், திரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தாயகம் கவி, திரு.த.வேலு, திரு.எஸ்.சுதர்சனம், திரு.ஜோசப் சாமுவேல், திரு. ஜெ.ஜெ.எபினேசர், திரு.ஆர்.டி.சேகர், திரு.கா.கணபதி, டாக்டர் நா.எழிலன், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.எஸ். மதன்மோகன், திரு.ஆர்.துரைராஜ், திருமதி சரிதா மகேஷ்குமார், திரு.எஸ்.நந்தகோபால், திரு.நேதாஜி யு.கணேசன், நொளம்பூர் வே.ராஜன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு. பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), ,திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**